# மதுரை மாவட்டம்

SRM

## ஆயத்தத் தேர்வு - 2026

தேதி:02/02/2026

**11** - ஆம் வகுப்பு

## வணிகவியல்

நேரம் : 3.00 மணி

மொத்த மதிப்பெண்கள் : 90

---

I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (20*1=20)

1. வியாபாரம் மற்றும் வணிகம் ----- பேரரசில் பொதுவானவையாக இருந்தது
அ) பல்லவர் ஆ) சோழர் இ) பாண்டியர் ஈ) சேரர்

2. ஒரு முழுப் பொருள் தயாரிக்கப் பல நிலைகளைக் கடக்கும் உற்பத்தி முறை என்பது
அ) பகுப்பாய்வு உற்பத்தித் தொழில் ஆ) செயற்கை பொருள் உற்பத்தி தொழில்
இ) தொடர்முறை உற்பத்தித் தொழில் ஈ) ஒன்று திரட்டும் உற்பத்தித் தொழில்

3. தனியாள் வணிகத்தின் மிகப்பெரிய குறைபாடு
அ) வரையறு பொறுப்பு ஆ) வரையறாப் பொறுப்பு இ) அமைப்பெளிமை ஈ) விரைவான முடிவு

4. ராக்டேல் சொசைடியிட்டி தோற்றுவித்தவர் -------
அ) ராபர்ட் ஓவன் ஆ) H.C. கால்வெர்ட் இ) டால் மாக்கி ஈ) லம்பேர்ட்

5. உள்ளூர் பகுதி வங்கிகள் ஊக்குவித்து வருவது
அ) கிராம சேமிப்பு ஆ) வணிகச் சேமிப்பு இ) தொழிற்துறை வளர்ச்சி ஈ) விவசாய வளர்ச்சி

6. கீழ்க்கண்டவற்றுள் காப்பீட்டு ஒப்பந்தத்திற்கு பொருந்தாதது எது?
அ) தன்னிச்சை ஒப்பந்தம் ஆ) நிபந்தனை ஒப்பந்தம் இ) ஈட்டுறுதி ஒப்பந்தம் ஈ) பகிர்ந்தளித்தல்

7. உற்பத்தியாளரிடமிருந்து பொருட்களை நுகர்வோருக்கு எடுத்துச் செல்லும் செயலுக்கு ----- என பெயர் அ) போக்குவரத்து ஆ) பெயர்ச்சியியல் இ) வழங்கல் முறை ஈ) சந்தையியல்

8. பின்வருவனவற்றில் எது சமுதாயத்திற்கு பொருட்களின் விற்பனையை அதிகரிக்கச் செய்ய உதவுகிறது? அ) வணிகத்தின் வெற்றி ஆ) விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள்
இ) ஒழுக்கவியல் ஈ) தொழில் முறை நிர்வாகம்

9. கடன் பத்திரதாரர்கள் ஒரு நிலையான -------- விகிதம் பெற தகுதி உடையவர்கள்
அ) பங்காதாயம் ஆ) இலாபம் இ) வட்டி ஈ) இவை எதுவும் இல்லை

10. நாட்டின் பொருளாதாரத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின்_--------- பங்களிப்பு இன்றியமையாதவை.
அ) தொழில்துறை உற்பத்தி ஆ) ஏற்றுமதி இ) வேலைவாய்ப்பு ஈ) மேற்கூறிய அனைத்தும்

11. உற்பத்தியாளருக்கும்,நுகர்வோருக்கும் இடையே இணைப்புச் சங்கிலியாக இருப்பது
அ) வியாபாரம் ஆ) தொழிற்சாலை இ) வணிகம் ஈ) வர்த்தகம்

12. வாங்குபவரையும் விற்பவரையும் ஒருங்கிணைக்கும் பணியினை மேற்கொள்பவர்
அ) தரகர் ஆ) கழிவு முகவர் இ) விற்பனை முகவர் ஈ) இருப்பு வைத்திருப்பவர்

13. உள்நாட்டில் இருந்து பொருட்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டால் அது .............. எனப்படும்
அ) உள்நாட்டு வியாபாரம் ஆ) ஏற்றுமதி இ) அயல்நாட்டு வியாபாரம் ஈ) இணை வினை

14. உலக வர்த்தக அமைப்பின் தினசரி அலுவல் ---- டம் ஒப்படைக்கப்பட்டிருப்பது
அ) மேலாண்மக் குழு ஆ) பொதுக்குழு இ) நிர்வாகக் குழு ஈ) பொதுச் சபை

15. மூன்றாம் நபர் என்று யாரை கூறுகின்றோம்?
அ) வாக்குறுதி அளிப்பவர் ஆ) வாக்குறுதி பெறுபவர் இ) முகவர் ஈ) சட்டரீதியான பிரதிநிதி

16. செயல்படாத ஒரு ஒப்பந்தம் சட்டப்பிரிவு 56 இன் கீழ் அ) தவிர்க்கக்கூடிய
ஆ) செல்லாத இ) செல்லக் கூடியது ஈ) நிறைவேற்ற முடியாதது

17. இந்தியாவில் வேளாண்மை வருமானம் என்பது
அ) முழுவதும் வரி விதிப்பிற்குட்பட்டது ஆ) முழுவதும் வரி விலக்கிற்குட்பட்டது
இ) வருமானமாக கருதப்படுவது இல்லை ஈ) மறைமுக வரி

18. IGST என்பது
அ) ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி ஆ) இந்திய சரக்கு மற்றும் சேவை வரி
இ) ஆரம்ப சரக்கு மற்றும் சேவை வரி ஈ) மேற்கூறிய அனைத்தும்

19. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடுக
அ) சரக்காணை ஆ) பார்வைச் சீட்டு இ) கப்பல் ரசீது ஈ) உடன்படிக்கை

20. கூற்று (A) : நிலையான இடத்தில் கடை அமைத்து பொருட்களை வைத்து வியாபாரம் செய்யும் சில்லறை வியாபாரிகளே நிலையிட சில்லறை வியாபாரிகள் எனப்படுவர்.

காரணம் (R) : நுகர்வோர்களை நோக்கி இடம் விட்டு இடம் பெயராது அதே இடத்தில் பல ஆண்டுகள் தொடர்ந்து விற்பனை மேற்கொள்வர்.

அ) A மற்றும் R சரியானது மற்றும் A க்கு R சரியான விளக்கம்

ஆ) A மற்றும் R சரியானது மற்றும் R என்பது A க்கு தவறான விளக்கம்

இ) A சரியானது ஆனால் R தவறானது ஈ) A தவறானது ஆனால் R சரியானது

**II குறிப்பு : ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.**
**வினா எண். 30 ற்கு கட்டாயமாக பதிலளிக்கவும்.** (7*2=14)

21. பண்டமாற்று முறை என்றால் என்ன?
22. இந்துச் சட்டத்தின் இரண்டு பிரிவுகள் யாவை?
23. கடன் அட்டை (Credit card) - சிறுகுறிப்பு வரைக..
24. தனி உரிமையியலின் இரண்டு தீமைகளை கூறுக.
25. சமூக அதிகாரம் என்பதன் பொருள் யாது?
26. குறு நிறுவனங்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக
27. இடைநிலையர் என்பவர் யார்?
28. சரக்காணை என்றால் என்ன?
29. இந்திய ஒப்பந்தச் சட்டம் எத்தனை பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன .அவை யாவை?
30. மத்திய சரக்கு மற்றும் சேவை வரி என்றால் என்ன?

**III குறிப்பு : ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.** (7*3=21)
**வினா எண். 40 ற்கு கட்டாயமாக பதிலளிக்கவும்.**

31. பாண்டியர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?
32. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
33. அரசு நிறுமம் என்றால் என்ன?
34. தனி உரிமையியலின் நன்மைகளை கூறுக( ஏதேனும் 3)
35. பன்னாட்டு நிறுமங்கள் இந்தியாவிற்கு தேவையா? ( ஏதேனும் 3)
36. தொழில் நிதியியல் வரைவிலக்கணம் தருக.
37. மறு ஏற்றுமதியின் சிறப்புக் கூறுகளை விவரி
38. உடன்படிக்கை என்றால் என்ன?
39. நபர் என்ற சொல்லில் யாரெல்லாம் அடங்குவர்?
40. இருதலை ஒப்பந்தம் என்றால் என்ன? (7*5=35)

**IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

41. அ) உற்பத்தித் தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் ஓர் ஒப்பீடு செய்க. (ஏதேனும் 5) ***(அல்லது)*** ஆ) பல்வேறு வகையான குறுகிய கால நிதி ஆதாரங்களை விளக்குக. (ஏதேனும் 5)

42. அ) இறக்குமதி வணிகத்தின் நோக்கங்கள் யாவை? ***(அல்லது)***
ஆ) சட்டப்படி செல்லக்கூடிய ஓர் ஒப்பந்த புள்ளியின் இன்றியமையாத கூறுகள் யாவை? (ஏதேனும் 5)

43. அ) பன்னாட்டு வியாபாரத்தின் பல்வேறு வகைகளை விவரி ***(அல்லது)***
ஆ) இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விரிவாக வகைப்படுத்துக . (ஏதேனும் 5)

44. அ) சரக்கு மற்றும் சேவை வரியின் வகைகளை விளக்குக ***(அல்லது)***
ஆ) வணிகத்தின் பல்வேறு தடைகளைக் கூறுக.(ஏதேனும் 5)

45. அ) பொது கழகத்தின் இயல்புகள் யாவை? (ஏதேனும் 5) ***(அல்லது)***
ஆ) ஏட்டுக்கடன் முகமையின் சிறப்பியல்புகளை விவரி.

46. அ) கூட்டாண்மைக் கலைப்பின் வகைகளை விவரி..(ஏதேனும் ஐந்து) ***(அல்லது)***
ஆ) சில்லறை வியாபாரிகளின் பண்பு நலன்கள் யாவை?

47. அ) உங்கள் வாடிக்கையாளர் (KYC) விதிமுறைகளை பற்றி விளக்குக. ***(அல்லது)***
ஆ) செலுத்தல் சமநிலைக்கும் வாணிபச் சமநிலைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5).